තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ කොමිෂන් සභාව
தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு
RIGHT TO INFORMATION COMMISSION
(CONSTITUTED UNDER THE ACT, No 12 OF 2016)

කාමර අංක 203-204 ,බණ්ඩාරනායක ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලා පරිශ්‍රය, බෞද්ධාලෝක මාවත කොළඹ 07
அறை இல 203-204, பிஎம்ஐசிஎச் ,பௌத்தாலோக்க மாவத்தை , கொழும்பு 07.
Room No 203-204, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07

මගේ අංකය எனது My No: RTIC/AD/MA1/03/01/2025

ඔබේ අංකය உமது இல Your No.:

දිනය திகதி Date: 2025.12.08

பணிப்பாளர்
தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்
வித்யா மாவத்தை, கொழும்பு 07

அனர்த்த நிவாரணங்கள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துதல்

பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள், இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள்,புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள்,மாதிரிப் படிவங்கள், கட்டணங்கள் மற்றும் அதற்குரிய கால எல்லை" என்பவற்றை 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 03 ஆம் திகதிய மற்றும் 2004/66 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியினூடாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 2017 ஆம் ஆண்டு ஒழுங்குவிதிகளின், 20 ஆம் இலக்க விதியின் V ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "பொது சேவைத் தகவல்கள் பிரிவில் சகல பகிரங்க அதிகாரசபையும் அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும் எனக் கூறுகிறது.

சீரற்ற வானிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலான சுற்றறிக்கைகள் நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதோடு, அதற்கிணங்க நிவாரணம் கோருவதற்கு தங்களின் நிறுவனத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதோடு அவ் விண்ணப்பங்கள் தங்களின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்படவில்லை.

ஆகவே, தங்களுக்கு இத் தகவல்களை வெகுவிரைவில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடுமாறும்,நிவாரணம் வழங்கல் தொடர்பான சகல விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டல்கள் அறிவுறுத்தல்கள் போன்றனவற்றை வலைத்தளத்தில் வெளியிடுமாறு அறிவிப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 14(அ) மற்றும் 14(ஆ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 15(இ)ஆல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் படி இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதை கருத்திற் கொள்க.தொடர்புடைய சட்டம் மற்றும் வர்த்தமாணியின் பிரதி உரிய நடவடிக்கைகளுக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க

பணிப்பாளர் நாயகம்

பிரதி: 1.செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
2.மேலதிக செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு